JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 1149/2025 Date:04.06.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. ஐய்யனார், காவல் உதவி ஆய்வாளர், வி7 நொளம்பூர் காவல் நிலையம். |
| தந்தை பெயர் க/பெ | |
| முகவரி | |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 04th day of May 2026.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வி7 நொளம்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பணி புரிந்த காவல் ஆய்வாளர் திரு. இளங்கோவன் பணி விருப்ப ஓய்வு பெற்றுவிட்டதால் அவரது கையொப்பம் எனக்கு பரிட்சியம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.07.2025 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஜீவநடேசன் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி திரு. தர்மராஜன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை குற்ற எண். 128/2025, சட்டப்பிரிவுகள் 304(2) பி.என்.எஸ் இன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதன் பிறகு சம்பவயிடம் சென்று சாட்சிகள் திரு. ராஜ்குமார், திரு. சண்முகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவடயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைப்படமும் தயார் செய்தார். மேற்படி சாட்சிகளின் தனித்னியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர், திரு. ஜீவநடசேன், ஆய்வாளர் திரு. இளங்கோவன் இடம் ஒப்படைத்தார். அவர் வழக்கு கோப்புகளை ஆராய்ந்து சாட்சிகள் 1 முதல் 3 வரை விசாரணை செய்த போது உதவி ஆய்வாளரிடம் என்ன கூறினாரோ அதனையே ஆய்வாளரிடமும் கூறியதால் அவர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அதன் பின்பு வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரி மேஷா என்பவரை விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் தரவிருப்பதாக கூறியதன் பேரில் சாட்சிகள் திரு. சிவக்குமார் மற்றும் திரு. மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் எதிரி பயன்படுத்தி வழக்கு

சொத்தான இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகளின் மூன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும், எதிரி கௌத்தம் என்பவரை கைது செய்த போது அவர் தானாக மூன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை சாட்சிகள் திரு.ஜனார்தனன், திரு. மனோஜ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான செல்போன்களை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும், எதிரிகள் திரு. மேஷா, திரு. கணேஷ் குமார், திரு. பரத், திரு. கௌத்தம் ஆகியோர்களை கைது செய்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பாட்டார்கள். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும், சாட்சிகள் திரு. சந்திரசேகரன், திரு. இளையராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முத்து இறுதி அறிக்கை ஆய்வாளராகல் தாக்கல் செய்யப்பட்டது. புகார் **அ.த.சா.ஆ. 1** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ. 3** மற்றும் **அ.த.சா.ஆ. 4** ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி முறையே **அ.த.சா.ஆ.5** மற்றும் **அ.த.சா.ஆ. 6** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் முறையே **அ.த.சா.ஆ. 7** மற்றும் **அ.த.சா.ஆ. 8** ஆகவும், படிவம் 91 **அ.த.சா.ஆ.9** ஆகவும், புகைப்பட நகல் **அ.த.சா.ஆ. 10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**நீங்கள் இவ்வழக்கில் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் இப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur